# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● அக்டோபர் 13, 2018

Weekly E-paper ● October 13, 2018



உள்ளே...



பூவுலகின் நண்பர்கள் சுந்தரராஜன்
நேர்காணல்



பரியேறும் பெருமாள்
திரைவிமர்சனம்




குருட்டாட்டத் தேர்தல்!
தலையங்கம்




## விடுதலையானார் கோபால்
## அவமானப்பட்டது அரசு!

கருஞ்சட்டைத் தமிழர்
ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2049 ●அக்டோபர் 13, 2018
Weekly E-paper ●October 13, 2018

# விடுதலையானார் கோபால் அவமானப்பட்டது அரசு!



சுப.வீரபாண்டியன்

“சிலர் புகழோடு பிறக்கின்றனர், சிலர் புகழை அடைகின்றனர், சிலர் மீது புகழ் வந்து அழுத்துகிறது" (Some are born great, some achieve greatness, some have greatness thrust upon them) என்பார் ஷேக்ஸ்பியர். கடந்த வாரம், நக்கீரன் கோபால் மீது புகழ் வந்து அழுத்தியது.

கோபாலும் அவர் நண்பர்கள் சிலரும் பூனாவிற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில், விமான நிலையத்தில் அவரைக் கைது செய்தனர். கல்லூரி ஆசிரியர் நிர்மலாதேவி வழக்கில், ஆளுநர் குறித்து எழுதியதற்காகக் கைது செய்யப்பட்டார் என்பது பிறகு தெரியவந்தது.

அதற்காக அவர் மீது ஒரு வழக்கு மட்டும் பதிவு செய்திருந்தால், அது ஒரு சாதாரணச் செய்தியாக இருந்திருக்கும். ஆனால், 124 ஆவது பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்து, அவரைக் கைதும் செய்ததால், அன்று முழுவதும், அத்தனை ஊடகங்களிலும் அவரே தலைப்புச் செய்தியாக இருந்தார். அவருக்கு ஒரு பெரிய புகழை அரசே தேடிக் கொடுத்தது.

கைது நடவடிக்கையை மக்களோ, ஊடகங்களோ, அரசியல் கட்சிகளோ, சமூக வலைத்தள நண்பர்களோ யாருமே ஆதரிக்கவில்லை. முதல் நாள் இரவு கொடுக்கப்பட்ட ஒரு புகார் அடிப்படையில், மறுநாளே அவர் கைது செய்யப்பட்டார் என்னும் காவல்துறையின் "சுறுசுறுப்பை" எல்லோரும் கண்டிக்கவே செய்தனர். மத்திய ஆளும் கட்சிக்கு வேண்டியவர்கள் என்றால், நீதிமன்றமே சொன்னாலும் கைது செய்யாமலிருப்பதும், மற்றவர்களை உடனடியாகக் கைது செய்வதும், தமிழக அரசின் அச்சத்தையும், அடிமைச் சிறுமதியையும் காட்டுகின்றது.

சட்டத்தின் 124 ஆவது பிரிவை (தேசத்துரோகம்) இப்படி அடிக்கடி பயன்படுத்துவதும், அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதும், அதனைக் கேலிக்கூத்தாக்கிவிடும் என்பதைத்தான் அன்றைய நிகழ்வுகள் உலகிற்குச் சொல்லின. பொதுவாக, அப்பிரிவின் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தால், கீழமை நீதிமன்றம் மட்டுமில்லை, அமர்வு நீதிமன்றம் கூட உடனடியாகப் பிணை (ஜாமீன்) வழங்கிவிடாது. உயர்நீதிமன்றம் சென்றுதான் பெறவேண்டியிருக்கும். அங்கும் எளிதில் கிடைத்துவிடாது. ஆனால் கோபால் வழக்கில், நடுவர் மன்றமே, அன்று மாலையே, சொந்தப் பொறுப்பில் பிணை கொடுத்துவிட்டது என்றால், வழக்கின் 'லட்சணம்' என்னவென்று புரிகிறது இல்லையா?

அரசுக்கு இன்னொரு கணக்கும் இருந்திருக்கக்கூடும். இந்தவாரம் முழுவதும் விழாக்களையொட்டி (Pooja Holidays) நீதிமன்றங்களுக்கு விடுமுறை. எனவே பல நாள்கள் கோபாலைச் சிறையில் வைத்துவிடலாம் என்று கருதி

...முன்பக்கத் தொடர்ச்சி



இருக்கலாம். எல்லாக் கணக்கும் பொய்த்துப் போனதோடு, அரசுக்கு ஓர் அவப்பெயரும் வந்து சேர்ந்தது.

நக்கீரன் வழக்கில் இன்னொரு நம்பிக்கையும், பொது வாழ்வில் உள்ளவர்களுக்குக் கிடைத்தது. ஒருவருக்கு அநீதி நடக்கும்போது, மற்றவர்கள் அதனைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதே அந்த நம்பிக்கை. ஓர் ஊடகவியலாளரைக் கைது செய்தால், அத்துறை சார்ந்த நண்பர்களும், அரசியல் தலைவர்களும் அறிக்கை கொடுப்பதோடு நின்றுவிடுவார்கள் என்று அரசு கருதியிருக்கும். அந்த நினைப்பும் அன்று உடைந்துபோனது. எல்லோரும் களத்திற்கே வந்துவிட்டனர்.

அந்த வகையில், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ அவர்களுக்கு முதல் நன்றி சொல்ல வேண்டும். அரசியல் தலைவராகவும், வழக்கறிஞராகவும் காவல் நிலையத்திற்கே அவர் சென்று ஒரு பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார். ஏதோ, பாகிஸ்தான் தீவிரதிவாதியை உள்ளே வைத்திருப்பது போல், கோபாலைக் காண அனுமதி மறுத்து, வைகோவையும் கைது செய்தனர். நிலைமை சூடு பிடித்தது.

கோபாலை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கே திமுக தலைவர் ஸ்டாலினும், கட்சித் தலைவர்களும் சென்றனர். முதலில் உள்ளே விட முடியாது என்று சொல்லிப் பார்த்தனர். அது பயனளிக்கவில்லை. பிறகு உள்ளே போய் அவர் கோபாலைச் சந்தித்தார். நாடு முழுவதும் அது பேசப்பட்டது.

விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவனும், பொதுவுடைமைக் கட்சிச் செயலாளர் முத்தரசனும் அடுத்துச் சென்றனர். ஊடகவியல் நண்பர்களும் தங்கள் பங்கினைச் சரியாகச் செய்தனர். ஆர்ப்பாட்டம் நடத்தினர். நாடெங்கும் செய்தியைப் பரப்பினர். நீதிமன்றத்திற்கே வந்து, மூத்த ஊடகவியலாளர் இந்து ராம், 124 விதி இதற்குப் பொருந்தாது என்பதனை எடுத்துச் சொல்லி வாதிட்டார்.

நக்கீரன் கோபால் இப்போது வெளியில் வந்துவிட்டார். அவமானச் சிறையில் அடைபட்டுக் கிடக்கின்றது அரசு!

இனியேனும் இந்த ஆளுநரும், அரசும் பாடம் கற்பார்களா?

●

**திரை விமர்சனம்**

# மலக்குழிக்குள் மூச்சை அடக்கும் நான் யார்?

# பரியேறும் பெருமாள்

**கவுதம்**

இரண்டு வாரங்களுக்கு முன்பு சமூக வலைத்தளங்களில் சிறிய அதிர்வலையை ஏற்படுத்திய பாடலில் வரும் வரிகள் இவை. எழுப்பப்பட்ட கேள்விகளுக்கான பதில் படத்தில் இல்லை. பரியேறும் பெருமாள் பதில் சொல்ல விரும்பவில்லை. மாறாக இக்கேள்விகளே அவன் வாழ்க்கை. இக்கேள்விகளே இத்திரைப்படம்.

கதாநாயகனின் பெயர் பரியேறும் பெருமாள். படத்தில் எட்டு முக்கியக் கதாபாத்திரங்கள். பரியன், அவனது செல்லநாய் கருப்பி, பரியனின் காதலி ஜோ, ஜோவின் தந்தை, பரியனின் நண்பன் ஆனந்த், அவன் தந்தை, ஒரு பேராசிரியர் மற்றும் ஒரு கிழவர். சமூகத்தின் நல்லது தீயது என உலவும் அத்தனை உணர்வுகளையும் இந்தக் கதாபாத்திரங்களின் வழி கடத்துகிறார் இயக்குநர் மாரி செல்வராஜ்.

கருப்பியைக் காதலிக்க ஆயிரம் காரணங்கள் இருப்பினும், நீல நிறப் பூச்சு பூசி தண்டவாளத்தில் தன் பரியனைத் தேடி வரும் கருப்பியை எத்தனை ரயில்கள் வந்தாலும் அழிக்க முடியாது. தன் குடும்பத்தில் ஒருத்தியான அவனது நாயைச் சாதியம் கொன்று பசியாற , நாயைப் பறிகொடுத்த நாயகனோ , தானும் இரையாகப் போவதை அறியாமல் கல்லூரியில் சேர்கிறான்.

"அம்பேத்கர் ஆகனும்'னு சொல்றான், சீக்கிரம் பிரச்சனை பண்ணுவான்", "கோட்டா'ல வந்த கோழிக்குஞ்சு", போன்ற வசனங்கள் மனிதர்களின் உள்ளத்தில் தோய்ந்திருக்கும் சாதிய வன்மங்களை வெளிப்படுத்துகின்றன. சாதியத்தின் வன்மத்தைப் பாதுகாத்து வருவது குடும்பம் எனும் அமைப்புதான் என்பதற்கு இன்னொரு சான்று ஜோவின் குடும்பம். தன் சொத்தை, சாதியை, அதிகாரத்தைத் தன் வசம் வைத்துக்கொள்ளப் பாசம், அன்பு என்ற போர்வையை அணிந்து கொள்கிறது இந்தக் குடும்ப அமைப்பு. இயற்கையான காதலை எதிர்க்கக் குடும்ப நிறுவனத்தை முன்னிறுத்தும் சூட்சுமம் தான் அதிகார வர்க்கத்தின் வெற்றி.

பரியனின் தோழன் ஆதிக்கச் சாதியைச் சேர்ந்தவனாகக் காட்டப் பட்டிருப்பினும், அவனது செயல்பாடு இளைஞர்களுக்கு ஒரு பாடம்.

சட்டக் கல்லூரியில் படிக்கும் பரியனுக்கு இரண்டு பேராசிரியர்களுடனான உரையாடல் நடைபெறுகிறது. தன் மேஜையில் காந்தி புகைப்படம் வைத்துள்ள ஒருவர். அம்பேத்கர் படம் வைத்துள்ள ஒருவர். இருவருக்குமே பரியன் சட்டம் பயில வேண்டும் என்ற எண்ணம் இருக்கின்றது. ஆனால் ஒருவர் பரியனைப் பரிதாபக் கண்ணோட்டத்தில் அணுகுகிறார். மற்றொருவரோ கோழையாகத் தூக்கில் தொங்கும் பரியனை விடப் போரிட்டுச் சாகும் பரியன்களை ஊக்குவிக்கிறார். சாதியக் கேள்வியில் காந்திக்கும் அம்பேத்கருக்கும் இருந்த முரண்களை இரண்டே காட்சிகள் மூலம் இவ்வாறாகத் தெளிவுபடுத்துவது




இயக்குநரின் வெற்றி.

பரியனின் தந்தையாகத் தோன்றும் பெரியவர் , நடிப்பின் உச்சம். சமூகத்தின் விளிம்புநிலை மக்களை முக்கியக் கதாபாத்திரமாக நிறுவியிருக்கும் இயக்குநர் நம் நெஞ்சில் நிறைகிறார். நிர்வாணமாக ஓடவிட்டு வேடிக்கைப் பார்க்கும் காட்சியில் இந்தச் சாதியச் சமூகத்தால் கைகட்டி வேடிக்கைப் பார்க்கும் நாமும் நிர்வாணமாக நிற்கிறோம்.

ஒரு நாய், இரண்டு தேநீர் கோப்பைகள், பல கேள்விகள் எனப் படம் பார்த்து வெளியே வரும் நம்மை "உரையாடுங்கள், உரையாடுங்கள்" எனத் தன் பாணியில் கேட்டுக் கொள்கிறான் பரியன் எனும் போராளி.

ஹரி தாதாக்களுக்குக் காலா அவசியம். ஜோவின் தந்தைகளுக்குப் பரியன்கள் அவசியம். தமிழ்த் திரையில் பரியேறும் பெருமாள் ஒரு முக்கியத் தொடக்கம். மாரி செல்வராஜுக்கும், படக்குழுவினருக்கும் பாராட்டுகள். இந்த உரையாடலைச் சாத்தியப்படுத்திய பா.ரஞ்சித்திற்குப் பாராட்டுடன் கூடிய நன்றிகள். உரையாடுவோம்!

●

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
தமிழ்மறவன்
உதயகுமார்
வெற்றிச்செல்வன்

வெளியிடுபவர்
கோ.தினகரன்

இணையதளம்
www.keetru.com
www.peravai.com
www.peravainoolagam.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
122/130 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-4204 7162

## சென்னை மாவட்டம்



*30.09.2018 அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சென்னை மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் மண்டல, மாவட்டப் பொறுப்பாளர்களும், உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.*

## நூல் வெளியீடு




*30.9.2018 அன்று சென்னை திருவல்லிக்கேணியில் நடைபெற்ற கீழைப் பதிப்பகத்தின் இரண்டு நூல்கள் வெளியீட்டு விழாவில் தோழர் சுப.வீரபாண்டியன் உரையாற்றினார்.*

## கருஞ்சட்டைப் பதிப்பக மேலாண்மைக்குழு



*2.10.2018 அன்று கருஞ்சட்டைப் பதிப்பக மேலாண்மைக் குழுவின் கூட்டம் பேரவை அலுவலகத்தில் தோழர் பெல் ராஜன் தலைமையில் தோழர் சுபவீ முன்னிலையில் நடைபெற்றது.*

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## குருட்டாட்டத் தேர்தல்!

ஆடத்தெரியாத பெண், தெரு கோணலாக இருக்கிறது என்று சொல்வாளாம்.

ஆளத்தெரியாத அமைச்சருக்கு எல்லாமே கோணலாகத்தான் தெரியும்.

கேழ்வரகில் நெய் வடிகிறது என்கிறது தமிழக அரசு.

ஆமாம்! ஆமாம்! அதைத் தள்ளி வைத்து விடுகிறேன் என்கிறது தேர்தல் ஆணையம்.

சில மாநிலங்களில் தேர்தல் தேதிகளை அறிவித்த தேர்தல் ஆணையம், தமிழகத்தின் திருப்பரங்குன்றம், திருவாரூர் தொகுதிகளுக்குத் தேதிகளை அறிவிக்கவில்லை.

ஏனென்றால் 30 செ.மீ.க்கு மழை பெய்யப் போகிறது, இனி மழைக் காலம். மழைப் பெய்தால் திருவாரூரில் தேர்தல் நடத்த முடியாது என்று எடப்பாடி கடிதம் எழுதினாராம்.

திருப்பரங்குன்றத்தில் வழக்கு இருக்கிறது என்று அதே கடிதம் சொல்வதால் தேர்தலை அறிவிக்கவில்லையாம் ஆணையம்.

அப்படியானால் உள்ளாட்சித் தேர்தல் ஆண்டுக் கணக்கில் இழுத்துக் கொண்டு இருக்கிறதே.

அதற்கு அரசு பொறுப்பில்லையாம். வாக்காளர் பட்டியல் கணக்கெடுப்பு ஆண்டுக் கணக்கில் ஜவ்வாக இழுத்துக்கொண்டிருக்கிறதாம். இப்படி ஒத்தூதுகிறது தேர்தல் ஆணையம்.

இதற்குப் பெயர் அரசு! இவர்களுக்குப் பெயர் அமைச்சர்கள்! நடப்பது ஜனநாயக ஆட்சியாம்!

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு, ஸ்டெர்லைட் ஆலை, எட்டுவழிச் சாலை உள்பட மக்களின் அன்றாட வாழ்வியல் கூடப் பாதிக்கும் அளவுக்கு மக்கள் விரோத ஆட்சி இங்கே நடக்கிறது.

இப்படிப் பல்வேறு பிரச்சனைகளில் மத்திய பாசிச பா.ஜ.க. ஆட்சியின் கைப்பாவையாகவும், எடுபிடி அரசாகவும் தமிழக அரசு இருப்பதனால் மக்கள் அ.தி.மு.க.வை ஆதரிக்க மாட்டார்கள் என்பது உலகறிந்த செய்தி.

மக்கள் ஆட்சியில் மக்கள்தான் ஆள வேண்டும். அதிகாரிகள் இல்லை.

அதனால்,

உள்ளாட்சி உள்பட இடைத்தேர்தல்களை நடத்தி இருக்க வேண்டும்.

உண்மையில் தேர்தலைச் சந்திக்க அ.தி.மு.க. அரசு பயந்து போய் இருக்கிறது. காரணம் தோற்று விடுவோம் என்ற பயம்தான்.

அடுத்த ஆண்டு நாடாளுமன்ற, மாநிலப் பொதுத்தேர்தல்கள் வர இருக்கும் நிலையில் திருப்பரங்குன்றம், திருவாரூரில் தோல்வியைத் தழுவினால் வெட்கக்கேடு என்பதனால் தேர்தலை நடத்த அ.தி.மு.க. அரசுத் தயாராக இல்லை, பதுங்குகிறது.

நோட்டாவுடன் போட்டி போடும் ‘பெருமைக்குரிய’ பா.ஜ.க.வுக்கு, அ.தி.மு.க.வை விட்டாலும் வேறு வழியில்லை. அதன் தோள் மேல் ஏறி கரைசேரத் துடிக்கிறது.

திருமந்திரம், ஆறாம் தந்திரத்தில் இப்படிச் சொல்கிறார் திருமூலர்:

**‘‘குருடும் குருடும் குருட்டாட் டமாடிக்**
**குருடும் குருடும் குழிவிழு மாறே’’**

சரியாகத்தான் சொல்லியிருக்கிறார்.

# தமிழக வளங்கள் தமிழர்க்கே உரியன!

**ஹைட்ரோ கார்பன் பிரச்சனை தொடர்ந்து மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் நிலையில் இது குறித்து பூவுலகின் நண்பர்கள்- தோழர் சுந்தரராஜன் அவர்களிடம் தோழர் உதயகுமார் கண்ட நேர்காணல்...**

**அண்மையில் மத்திய அரசு 51 இடங்களில் ஹைட்ரோ கார்பன் எடுக்க ஒப்பந்தம் செய்திருக்கிறது. இதைப் பற்றிய உங்களுடைய பார்வை...**

தமிழ்நாட்டில் மூன்று இடங்கள் உட்பட மொத்தம் 51 இடங்கள் கொடுத்ததே தவறு. ஒரு இடத்தில் ஆய்வு செய்து அங்கே என்ன எடுக்கப் போகிறார்கள் எனக் கண்டறிந்து அதற்கான அனுமதி வழங்குவார்கள். இப்போது 'Open Access Policy' என்னும் HELP (Hydro-carbon Exploration License Policy) கொள்கை முடிவின் அடிப்படையில் அனுமதி மட்டும் பெற்றுக்கொண்டு பூமிக்கு அடியில் என்னக் கிடைத்தாலும் அதை எடுத்துக்கொள்ளலாம் என்கிற கொள்கையே தவறானது. ஒவ்வொரு விதமான பொருளுக்கும் ஒவ்வொரு விதமான விளைவுகள் இருக்கும். எனவே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது தவறான ஒன்றாகும்.

**மோடி அவர்களுக்குச் சுற்றுச்சூழலுக்கான விருது வழங்கப்பட்டது குறித்து...**

ஒப்பந்தம் கையொப்பமிட்ட அன்று மாலை மோடி சர்வதேசச் சூரியசக்திக் கூட்டமைப்பு நடத்திய விழாவில் கலந்து கொண்டார். அந்த விழாவில் அவருக்கு விருது வழங்கப்பட்டது. அதில் அவர் "இனிமேல் நாம் நிலப்பரப்பிற்கு மேல் உள்ள ஆற்றலை மட்டுமே பயன்படுத்த வேண்டும், நிலப்பரப்பிற்கு கீழ் உள்ள ஆற்றலை பயன்படுத்தியதால்தான் பருவநிலை மாற்றம் பெரிய பிரச்சினை ஆகிவிட்டது" என்று பேசினார். அன்று காலையில் 51 இடங்களில் ஹைட்ரோகார்பன் எடுப்பதற்கு அனுமதி வழங்கி விட்டு மாலை புதுப்பிக்கக்கூடிய ஆற்றல்களான காற்றாலை, சூரிய சக்தி போன்றவற்றை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று பேசுவது எவ்வளவு முரணானது. இதற்கு முன் ஒரு கல்வி மாநாட்டில் "பருவநிலை மாறவில்லை நாம்தான் மாறி வருகிறோம்" என்று பேசியவர். இந்தியாவின் வளங்களைச் சுரண்ட அம்பானிக்கும் அதானிக்கும் அனுமதி வழங்கியிருக்கிறார். இவருக்கு இந்த விருது கொடுக்கப்பட்டது முரணான விசயம் ஆகும்.


தோழர் சுந்தரராஜன்

**தமிழ்நாட்டில் வேதாந்தா நிறுவனத்திற்கு அனுமதி கொடுக்கப்பட்டது குறித்து உங்கள் கருத்து...**

தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டிற்குப் பிறகு தமிழ்நாட்டில் வேதாந்தா நிறுவனத்தின் மீது கடுமையான கோபம் நிலவி வருகிறது. அந்த உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் வேதாந்தா நிறுவனத்திற்குத் தமிழக அளவில் இரண்டு இடங்களும் இந்திய அளவில் 40க்கும் மேற்பட்ட இடங்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே இது மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத ஒரு செயலாகவே இருக்கிறது.

நெடுவாசல் விவகாரத்தின் போது "நாங்கள் புதிதாக ஹைட்ரோகார்பன் திட்டங்களை அனுமதிக்க மாட்டோம்" என்று சொன்ன தமிழக அரசுக்கு எதிராகவே இந்த ஒப்பந்தம் அமைந்திருக்கிறது. உலக அளவில் பெரிய அச்சுறுத்தலாக இருப்பது பருவநிலை மாற்றம். 'Business As Usual' என்று சொல்லப்படும் இன்றைக்கு இருப்பது போலவே இயங்குகிற அளவில் இன்னும் ஐம்பது அறுபது ஆண்டுகளில் 7 டிகிரி செல்சியஸ் அதிகமாகும். இப்படி இருக்கும்போது புதைபடிவ எரிபொருளை விட்டு நகர்ந்து செல்ல வேண்டிய நிலையில் பருவநிலை மாற்றத்தை அதிகப்படுத்தும் ஹைட்ரோகார்பன் திட்டத்தை செயல்படுத்துவது எப்படிச் சரியாகும்.

**மற்ற மாநிலங்களில் இந்தத் திட்டத்திற்கு எதிரான மக்கள் போராட்டம் எந்த அளவிற்கு இருக்கிறது?**

கிருஷ்ணா கோதாவரி பேசின் பகுதியில் மக்கள் எதிர்க்க ஆரம்பித்து விட்டார்கள். தமிழக அளவிற்கு விரிவாகவும் வீரியமாகவும் இல்லாவிட்டாலும் மற்ற இடங்களில் தற்போது எதிர்க்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

**தமிழக அரசிடமிருந்து இத்திட்டத்தை செயல்படுத்தாமல் இருக்க, என்ன நடவடிக்கைகளை எதிர்பார்க்கலாம்?**

டெல்டா மாவட்டங்களைப் 'பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக' அறிவிக்க வேண்டும். இங்கு உணவு உற்பத்தி மட்டும் தான் நடக்க வேண்டும். டெல்டா மாவட்டங்கள் 67% உணவு உற்பத்தி செய்தது இன்று அது 35 சதவீதமாக குறைந்துவிட்டது. எனவே இதைக் கொள்கை முடிவாக அரசு எடுக்க வேண்டும். தமிழகத்தின் கடற்கரைப் பகுதிகளிலும் ஹைட்ரோ கார்பன் எடுக்க அனுமதி வழங்கக்கூடாது.

**எரிபொருள் தேவை அதிகரிப்பு, விலை உயர்வு ஏற்படுவதால் இது போன்ற திட்டங்கள் தேவை என்று சொல்லப்படுவது குறித்து உங்கள் கருத்து என்ன?**

பொதுவாக இப்படிச் சொல்வதன் மூலம் கச்சா எண்ணெய் இறக்குமதி குறையும் என்று சொல்வார்கள். இன்றைய நிலையில் நாம் ஏன் இறக்குமதி செய்ய வேண்டும் என்கிற கேள்வியை விட, நாம் ஏன் பயன்படுத்த வேண்டும் என்ற கேள்விதான் முன்னெடுக்கப்பட வேண்டும். பொதுப் போக்குவரத்து அதிகப்படுத்தப்பட வேண்டும். மின்சார வாகனங்கள் போன்றவற்றை அதிக அளவிலான பயன்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும். இதற்குப் புதுப்பிக்கக் கூடிய ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும். இதை நோக்கியே முன்னேற்றம் செய்ய வேண்டும். பாரிஸ் ஒப்பந்தத்தில் 2005 ஆம் ஆண்டு வெளியிட்ட கார்பன் அளவை விட 30 சதவீதம் குறைப்போம் என்று கையெழுத்திட்டுவிட்டு அதற்கு மாறாக ஹைட்ரோ கார்பன் திட்டங்களை செயல்படுத்துவதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

**இந்த விஷயத்தில் மாநில உரிமைகள் எந்த அளவிற்குப் பறிக்கப்பட்டிருக்கிறது?**

தமிழகத்தின் வளங்கள் உரிமை தமிழக மக்களுக்கானது. இந்த வளங்களின் இறையாண்மை மக்களுக்கு உரியது. இதை எப்படி மத்திய அரசு இது போன்ற நிறுவனங்களுக்கு வழங்க முடியும். இது மாநில உரிமைகளைப் பெரிய அளவில் பறிக்கக்கூடிய செயலாக அமைந்திருக்கிறது.

**இதில் உங்களின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்ன?**

பெட்ரோலிய மண்டலத்திற்கு எதிரான வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. அந்த வழக்கில் தெரியவரும் முடிவுகளைப் பொறுத்தே அடுத்த கட்ட நடவடிக்கைகள் அமையும். ●

# எதிர்வினை



சென்ற வார இதழில் வாசகர் கேட்ட கேள்வி மிக அருமை... அதற்கு அய்யாவின் பதில் இரத்தினச் சுருக்கமாக அதேசமயம் தெளிவாக இருந்தது... தோழர் வெற்றிச்செல்வன் எழுதிய ‘அட்மின்களும் அடிமை அரசும்’ கட்டுரையும் மிக அருமையாக இருந்தது... புனிதமாக்கும் தீர்ப்பு... பெண்ணுரிமை பேசியது.

***கதிர்மணி***



தோழர்.எழில் இளங்கோவனின் ஆகச் சிறந்த வரலாற்றுக் கட்டுரை மிக அருமை. ஆரியத் திரிபுகளை மிக அருமையாக விளக்கியிருக்கிறார். சுபவீ அய்யாவின் கட்டுரை மிக அருமை. நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மிக அருமையாக விளக்கியிருக்கிறார். கள்ளக்காதல் பற்றி நான் எண்ணியதை நேர்த்தியாக அவரது ஈரோட்டுக் கண்ணாடி கொண்டு விளக்கியுள்ளார். நன்றிகள் பல.

***அருள் ஆனந்த்***

## திருச்சியில்



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பாக *7.10.2018* அன்று திருச்சி சுருதிஸ்ரீ மகாலில் ‘மாநில சுயாட்சி’ குறித்த கூட்ட நிகழ்விற்குத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.சிங்கராயர் தலைமை வகித்தார். மாநகரச் செயலாளர் கேசவன் வரவேற்புரை ஆற்ற கிழக்கு மண்டலத் தலைவர் மணிவண்ணன், மாநில இளைஞரணித் துணை அமைப்பாளர் கார்திக் முன்னிலையில் பொதுசெயலாளர் சுப.வீரபாண்டியன் மாநில சுயாட்சி குறித்து உரையாற்றினார்.

## கலை இலக்கியப் பேரவை





கடலூர் மணிமாறன்

*7.10.2018* அன்று மாலை திருச்சியில், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் வழிகாட்டுதலில் இயங்கக் கூடிய, “திராவிடத் தமிழர் கலை இலக்கியப் பேரவை” என்னும் தனி அமைப்பு உருவாக்கபட்டது. அப்பேரவைக்கு, கடலூர் மணிமாறன் தலைவராகவும், புலவர்கள் செயபால் சண்முகம், செல்லக்கலைவாணன் ஆகியோர் பொதுச்செயளாலர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 7 பெண்கள் உள்பட, 16 உறுப்பினர்கள் மாநிலச் செயற்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்



## ஆழ்ந்த இரங்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நெடுநாள் உறுப்பினரும், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் அவைத் தலைவருமான கயல் தினகரன் அவர்களின் துணைவியார் சாந்தா அம்மையார்(78) 3.10.2018 அன்று காலமானார். விருந்தோம்பலிலும், அனைவரிடமும் அன்பு காட்டுவதிலும் இணையற்றவராக விளங்கிய அம்மையாரின் மறைவு அனைவருக்கும் துயரம் தருவதாகும். அய்யா கயல் தினகரன் அவர்களின் பொதுப்பணிகளுக்குப் பின்புலமாக விளங்கியவர் அவர். அவருடைய மறைவுக்குத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை, தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து கொள்கிறது.

**–சுப.வீரபாண்டியன்**
(பொதுச்செயலாளர்)

## வினாவும்? விடையும்!

**கறுப்பு நிறம் திராவிடத்தின் நிறம் என்கிறீர்கள். கறுப்புக் கொடிக் காட்டுவது அவமானப் படுத்துவது என்கிறீர்கள். அப்படியானால் திராவிடம் என்பது அவமானத்தின் அடையாளமா?** – **சுதாகர், கோவை**



**சுபவீ விடை:** கறுப்புக் கொடி என்பது எதிர்ப்பின் வெளிப்பாடே தவிர அவமானப்படுத்துவதற்கானக் குறியீடு என்று எப்போதும் கருதியதில்லை. நாம் கறுப்புச் சட்டைப் போட்டிருப்பது கூட சமூகத்தில் மண்டிக் கிடக்கும் ஆதிக்கத்தையும் அறியாமையையும் எதிர்ப்பதற்காகத்தான் சமூக அநீதிகளை எதிர்த்துச் சமூக நீதிக்கான போர்க்குரலாகவே கறுப்பு நிறம் நம்மால் கருதப்படுகிறது எனவே தங்கள் எதிர்ப்பைக் காட்ட விரும்புவோர் யாராக இருந்தாலும் அவர்கள் கறுப்புக் கொடிக் காட்டுகின்றனர். இதில் முரண் ஒன்றும் இல்லை.

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.